1970 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்காவில் சதுப்பேரி குளத்திலும், சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயிலும் தூர் எடுப்பதற்காக பஞ்ச நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 27,300-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன.

அணைக்கட்டுகள்

*303 வினா—திரு. பி. ஜெயராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம் பேரணம்பட்டு தொகுதி பத்தர பள்ளி, மோர்தான இரண்டு அணைக கட்ட அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பத்தரப்பள்ளி கிராமத்தின் அருகில் மலட்டாற்றின் குறுக்கே ஒன்றும், மோர்தான கிராமத்தின் அருகில் கௌண்டிய நதியின் குறுக்கே மற்றொன்றும் ஆக இரு நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே பரிசிலிக்கப்பட்டன.

இவ்விரு திட்டங்களை எடுத்துக் கொள்ளுவது பாலாறு வடிநிலத்தின் நீரியல் அமைப்பினை நன்றாக ஆய்வு செய்து முடிக்கும் வரையில் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, பேரணம்பட்டுத் தொகுதியில் பத்திரபள்ளி, மோர்தான என்ற இரண்டு அணைகளைக் கட்டுவதாக காமராஜர் குடியாத்தத்திலே தேர்தலில் நின்ற நேரத்திலே அப்பொழுதே மக்களுக்குச் சொன்னதால் மக்கள் பேரார்வம் கொண்டு நம்முடைய தொகுதியிலே காமராஜர் வந்து அணைகட்டுகிறார் என்று ஆசையோடு இருந்தார்கள். அது நடைபெறவில்லை. நம்முடைய ஆட்சியிலே அணை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்த மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற அரசு துரிதமாக அந்த அணைக்கட்டுகளைக் கட்டிமுடிப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர் சொல்லி விட்டுப் போய்விட்டார். நாம் இப்பொழுது அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சட்டப்படி 2 ஏக்கருக்கு ஒரு டன் நெல் உற்பத்தியாகிறது என்று சொன்னால் அதற்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையிலே அணை கட்டவேண்டும். ஆனால் இந்த இன்வெஸ்டிகேஷன் நடத்திய அடிப்படையைப் பார்க்கக்கூடிய நேரத்திலே 1,500 ரூபாய்க்கு அடங்குகிறது. அப்படியிருந்தும், 4 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அளவிலே டாம்களைக்

கட்டக்கூடிய நேரத்திலே குறைந்த அளவிலே செலவாகக்கூடிய இந்த அணையைக் கட்டாமல் தள்ளிப்போட்டதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலாற்றின் தண்ணீர் அதிகமாகப் பயன்படுகிறது. பாப்பிலே அதிகமாகப் பாசன வசதிகளுக்காகப் பயன்படுகிறது. இவற்றையெல்லாம் பரிசீலித்து அரசாங்கம் விரைவிலே நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, பாலாறுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாலாறு பேசின் விதி என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை எடுத்துவிடுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த விதிபற்றி என்னைவிட கனம் உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும்.

* 304 வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள நெறிஞ்சிக்குடியாறு, கூடலூர் ஆறு, பாலாறு ஆகிய காட்டாறுகளின் குறுக்கே அணைகள் எழுப்பும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருமயம் வட்டம், நெய்வேலி கிராமத்தில் நெறிஞ்சிக் குடியாறின் குறுக்கே அணை எழுப்பும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. திருமயம் வட்டத்தில் கூடலூர் ஆறு, பாலாறு ஆகிய காட்டாறுகள் இல்லை.

(இ) இது உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பாறு என்பது பாலாறு என்று வந்து விட்டது. பாம்பாற்றின் குறுக்கே கைலாசபுரம் என்னுமிடத்திலே அணை கட்டப்பட இருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேப்போல பாம்பாற்றின் குறுக்கே வாளரமாணிக்கம், சொகவபட்டி, ஏற்றநாடு, இரும்பாநாடு, சித்தாகூர் ஆகிய இடங்களில் அணைகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கின்ற நிலைமை இருப்பதாலே இவைகளினுடைய இன்றியமையாத் தேவையைக் கருதி அவற்றைக் கட்டி முடிக்க உடனடியாக முடித்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒப்புதல் அளிக்கக் கூடிய நிலைமை இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.